முருகப்பெருமான் துணை

**மகான் சேதுமுனிவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.11.2022**, சனிக்கிழமை

1. தவராஜனே ஆறுமுகப்பெருமானின்
தனி அவதாரமாக வந்தநல்
அவதார கலியின் ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள் திங்கள்
குறைவிலா சூலதிகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03ம் நாள் 19.11.2022, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சேதுமுனிவர் யானும்
3. யானுரைக்க அரங்கன் அவதாரம்
உலகமாற்றம் நிகழ்த்த வேண்டி
ஞானபண்டிதன் கொண்ட கருணையே
நம்பகம் மிகுதி வைத்து மக்கள்
4. மக்கள் எல்லாம் பிரணவக்குடில்
மகத்துவம் அறிந்து வருதலுற
ஆக்கமுடன் அரங்க மகானின்
அடிபணிந்து ஞானம் பயில
5. பயிலவே பிறவிப் பிணியோடு
பந்தபாசக் கட்டுக்கள் விலகி
தயவான ஞான வாழ்வாக
தன் பிறவி சூட்சுமம் விளங்கி
6. விளங்கி தீவினை கொள்ளா
விடியலாம் சன்மார்க்க வழியை
கலங்கமற ஏற்றுத் தொடர்ந்து
கடைத்தேற்றம் தரும் வழிபாடாம்
7. வழிபாடாம் சரவண ஜோதிஎனும்
வழிபாட்டை நாளும் செய்து
தெளிவு திடம் சகலவளமும் கூடி
தேசிகனின் தேடலின் வழிவழி
8. வழிவழி உயர் தொண்டர்களாகி
வாழும் காலமே ஞானமாம்
அழியாமை உணர்ந்து சிறந்து
அரங்க மகானால் ஞானிகளாவர்
9. ஆவரே கலிகால மாயைகளை
அனைத்தையும் வென்று நன்கு
அவதார ஞானியர் பலமுமாகி
ஆறுமுகனார் காட்சி அடைந்து

10. அடைந்துமே இனி பிறவிகாணா
ஆனந்தப் பெருவாழ்வு கொண்டு
தடையின்றி பேருலகை மாற்றும்
தனிப்பெருஞ் சக்திகளாகத் தேறி

11. தேறியே ஞானிகள் ஆட்சி
தேசிகன் விரும்பும் ஞானஆட்சி
ஆறுதல்பட உலகினில் படைப்பர்
அறிவித்த அனுகூல ஆசிமுற்றே

—சுபம்—